MALAI MALAR 24 FEB 2007



மாணவியின் முகத்தில் வண்ணம் தீட்டும் சக மாணவிகள்

## ஈஷா யோக மையத்தில்

# குழந்தைகளின் நாடக பயிலரங்கம்

கோவை, பிப். 24-

ஈஷா யோக மையத்தில் குழந்தைகளின் நாடக பயில ரங்கம் நடந்தது.

நாடக பயிலரங்கம்

கோவை வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் அமைந் துள்ள ஈஷா யோக மையத்தில் ஈஷா பள்ளி இயங்கி வருகிறது. இங்கு 'குழந்தைகளின் நாடக பயிலரங்கம் என்ற ஒரு பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது.

பயிற்சி பட்டறையை டாக்டர் வேலு நடத்தினார். பல புதுமையான விளையாட்டு களை அறிமுகப்படுத்தினர். குழந்தைகளை கொண்ட பல வண்ண முகமூடிகளை உருவாக்க கற்றுக் கொடுத்தார். அவர்களுக்குள் புதைந்து கிடக்கும் ஆற்றலை அவர் களே அறியும் வண்ணம் வெளிப்படுத்தினார்.

பாராட்டு

நாடகத்தை குழந்தைகளே உருவாக்கி அதை மக்கள் காணும் வண்ணம் நடத்தி காட்டினார். கற்றல், கற்பித் தல் என்ற நிலையை கடந்து அனைவரும் ஒன்று சேர்ந்து இயக்குதல் என்ற நிலையை குழந்தைகளுக்கு உருவாக் கினர்.

டாக்டர் வேலு சரவண னின் இந்த செயல் பாட்டை அனைவரும் பாராட்டி னார்கள்.



தான் தயாரித்த முகமூடியுடன் மாணவி.